தினமணி

**வீராணம் ஏரியின் நீர்மட்டம் குறைப்பு**

First Published : 08 Nov 2011 04:24:03 AM IST




42.80 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி.

சிதம்பரம், நவ. 7: கடலூர் மாவட்டம் வீராணம் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு திங்கள்கிழமை நிலவரப்படி 42.80 அடியாக குறைக்கப்

பட்டுள்ளது.

÷வீராணம் ஏரியின் மொத்தக் கொள்ளளவு 47.50 அடியாகும். பாதுகாப்பு நலன் கருதி ஏரியின் நீர்மட்டம் 42.80 அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

÷ஏரிக்கு விநாடிக்கு 500 கனஅடி நீர் வந்துக் கொண்டிருக்கிறது. ஏரியிலிருந்து வெள்ளியங்கால் ஓடையில் 210 கனஅடியும், வி.என்.எஸ். அணைக்கட்டிலிருந்து 280 கனஅடி நீரும் வெளியேற்றப்

படுகிறது.

÷சென்னை குடிநீருக்கு விநாடிக்கு 21 கனஅடி நீர் அனுப்பப்படுகிறது என உதவிப் பொறியாளர் சரவணன் தெரிவித்தார்

**வேளாண் பல்கலை.யில் 757 புதிய ரகங்கள் கண்டுபிடிப்பு: துணைவேந்தர் தகவல்**

First Published : 07 Nov 2011 01:59:49 AM IST

திருவண்ணாமலை, நவ. 6: வேளாண் பல்கலைக்கழகம் மூலம் இதுவரை 757 புதிய பயிர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி கூறினார்.

ஜவ்வாதுமலை ஒன்றியம் ஜம்னாமரத்தூரில் சாமை வயல் விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை தாங்கி துணைவேந்தர் முருகேசபூபதி பேசியது:

வேளாண் பல்கலைக்கழகத்துக்குட்பட்ட கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அமெரிக்காவில் இரட்டை பட்டப்படிப்பு (dual dgree) பயில ரத்தன் டாடா அறக்கட்டளை நிதியுதவி அளிப்பது பாராட்டுக்குரியது.

இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 121 கோடியாகும். 2010-11-ல் 241.6 மில்லியன் டன் உணவு உற்பத்தி செய்து தன்னிறைவு பெற்றுள்ளோம். இதில் சர்க்கரை, அரிசி ஆகியவை 10 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு 85 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டு 115 லட்சம் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

63 லேசர் லெவலிங் கருவிகள்

ஜவ்வாதுமலை மக்கள் தங்கள் விவசாய நிலங்கள் மேடும் பள்ளமாக உள்ளன எனக் கூறியுள்ளனர். நிலங்களை சமன்படுத்த தமிழக அரசு 63 லேசர் லெவலிங் கருவிகள் வாங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சமன் செய்தால் ஒரு ஹெக்டேருக்கு ஒரு டன் உணவு உற்பத்தி செய்யலாம். அதிக மகசூல், வருவாய் ஈட்ட வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ள ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாகத்தை பின்பற்ற வேண்டும்.

ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்படும்

வணிகவரித் துறை அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும். வேலூர், திருவண்ணாமலை ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்த போது அமைக்கப்பட்ட 2 ஆராய்ச்சி நிலையங்கள் வேலூரில் அமைந்து விட்டன. திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிதாக ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்படும் என்றார் அவர்.

பஞ்சாப் மாநில வேளாண் விஞ்ஞானி ஆர்.எஸ்.சகால் பேசுகையில்:

கோ 4 சாமை விதையை அனைவரும் பயிரிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ விதைத்தால் போதும். டாடா நிறுவனம் மூலம் தேவையான உதவிகள் செய்யப்படும். வேளாண் பல்கலைக்கழகம் மூலம் இங்குள்ள விவசாயிகளுக்கு பயிற்சி தரப்படும். அனைத்து கிராமங்களிலும் சாமை சாகுபடி குறித்து செயல்விளக்கம் அளிக்கப்படும் என்றார்.டாக்டர் ஆர்.வீரபத்திரன், வேளாண் இணை இயக்குநர் அ.வீரமணி, ஒன்றிய குழுத் தலைவர் ஜி.ராஜமாணிக்கம், மாவட்டக் கவுன்சிலர் கே.மணி, ஊராட்சித் தலைவர் தமிழ்ச்செல்வி உள்ளிட்டோர் பேசினர். வேளாண் பல்கலை முனைவர்கள் சி.உதயசூரியன், நிர்மலகுமாரி ஆகியோர் திட்ட விளக்கவுரை ஆற்றினர்.

**பிசான பருவச் சாகுபடிக்கு பாபநாசம் அணையைத் திறக்க கோரிக்கை**

First Published : 07 Nov 2011 02:18:11 PM IST

அம்பாசமுத்திரம், நவ. 6: திருநெல்வேலி மாவட்டத்தில் பிசானப் பருவச் சாகுபடி மேற்கொள்ள பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் 84 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணை நிரம்பியது. ராமநதி அணை நிரம்பும் நிலையில் உள்ளது. பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி அணைகள் நீர்மட்டம்: பாபநாசம் அணை-97.35, சேர்வலாறு அணை-113.29, மணிமுத்தாறு அணை-54.75, கடனாநதி அணை-84.20, ராமநதி அணை-77.75.

விநாடிக்கு நீர்வரத்து: பாபநாசம் அணை-883.10 கனஅடி, மணிமுத்தாறு அணை- 118 கனஅடி, கடனாநதி அணை-135 கனஅடி, ராமநதி அணை-40 கனஅடி. பாபநாசம் அணையிலிருந்து 105 கனஅடியும், கடனாநதி அணையிலிருந்து 135 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வடகிழக்குப் பருவமழை நீடித்ததால் அணைகள் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. சில நாள்களாக மாவட்டத்தில் மழை இல்லாததால் அறுவடை செய்ய முடியாத நிலையில் இருந்த நெற்பயிரை விவசாயிகள் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, பிசானப் பருவச் சாகுபடியை மேற்கொள்ள பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடைகள் சீரமைக்கப்படுமா? பாசனக்கால்வாய்களில் உள்ள மடைகள் சேதமடைந்துள்ளன. இதனால் பாசனத்துக்கு தண்ணீர் பெற முடியாத நிலை உள்ளது. அம்பாசமுத்திரம் வட்டத்தில் வடக்கு கோடைமேலழகியான் கால்வாயில் பாசன மடைகள் சேதமடைந்துள்ளன. இதனால் பாசனத்துக்கு தண்ணீர் பெறுவதில் சிக்கல் உள்ளது. எனவே, மடைகளைச் சீரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**நெல் நேரடி விதைப்பில் பயிர் எண்ணிக்கை பராமரித்தல்**

First Published : 07 Nov 2011 12:50:13 PM IST

திருவாடானை, நவ. 6: திருவாடானை தாலுகாவில் நெல் பயிரில் பூச்சி தாக்குதலைக் குறைக்க நெல் நேரடி விதைப்பில் பயிர் எண்ணிக்கையை பராமரித்தல் பற்றி ஆர்.எஸ். மங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் யோசனை தெரிவித்தார்.

திருவாடானை தாலுகாவில் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது நல்ல மழை பெய்து வருவதால் நெற்பயிரும் நன்றாக வளர்ந்துள்ளது. பெரும்பாலான விவசாயிகள் பிபிடி 5204 ரகத்தினை (டீலக்ஸ் பொன்னி) சாகுபடி செய்துள்ளனர். இந்த ரக நெல் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்பட்ட ரகமாகும். பயிர் நெருக்கமாக இருந்து காற்றோட்டம், சூரிய வெளிச்சம் இல்லாத நிலையில் பூச்சி தாக்குதல் அதிகமாகிறது. எனவே நெல் வயல்களில் பயிரைக் களைந்து விடுதல் அவசியமாகும்.

பயிர் எண்ணிக்கை பராமரித்தல்: நீண்ட கால ரகங்களுக்கு 20 செமீக்கு 15 செமீ என்ற இடைவெளியில் பயிர் களைதல் வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 33 குத்துகள் இருக்குமாறு பயிரைக் களைந்து பயிர் இல்லாத இடங்களில் நடவு செய்ய வேண்டும். இதனால் அதிக தூர் கட்டுவதுடன் போதிய காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சமும் பயிருக்கு கிடைப்பதால் பூச்சி நோய் தாக்குதல் குறைவாக இருக்கும்.

சிங்க் சல்பேட் இடுதல்: மழை பெய்து வயல்களில் நீர் வடியாத நிலையில் பயிருக்கு துத்தநாகச் சத்து அவசியம். எனவே பயிர் வளர்ச்சிக்கு ஏக்கருக்கு சிங்க் சல்பேட் 10 கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து வயலில் இட வேண்டும்.

நெல் நுண்ணூட்ட சத்து இடுதல்: ஏக்கருக்கு நெல் நுண்ணூட்டச் சத்து 5 கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து இட வேண்டும். தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தில் சிங்க் சல்பேட் மற்றும் நெல் நுண்ணூட்ட சத்து உரம் மானிய விலையில் ஆர்.எஸ். மங்கலம் மற்றும் ஆனந்தூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார் வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர்.

**கரூர் மாவட்டத்தில் 12.48 மி.மீ மழை**

First Published : 07 Nov 2011 02:27:00 PM IST

கரூர், நவ. 6: கரூர் மாவட்டத்தில் 12.48 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் பரவலான மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்சேமிப்புப் பகுதிகளில் நீரின் அளவு கணிசமாக உயர்ந்து வருகிறது.

இந்நிலையில், சனிக்கிழமை காலை 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை கரூர் மாவட்டத்தில் சராசரியாக 12.48 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் பெய்த மழை விவரம் (மி.மீ), கரூர் - 16.20, அரவக்குறிச்சி - 1, க.பரமத்தி - 5.80, குளித்தலை - 43.30, மாயனூர் - 26, தோகைமலை - 12.30, பஞ்சப்பட்டி - 5, கடவூர் - 4.20, கிருஷ்ணராயபுரம் - 24, மைலம்பட்டி - 12 மில்லி மீட்டரில் மழை பதிவாகியுள்ளது.

மழையால் சனிக்கிழமை நெரூரில் 5 குடிசைகளும், வாங்கப்பாளையத்தில் ஒரு குடிசையும், சணப்பிரட்டியில் ஒரு சுவரும் இடிந்து விழுந்தன.

**உர விற்பனையாளர்கள் கவனத்துக்கு...**

First Published : 07 Nov 2011 12:50:40 PM IST

சிவகங்கை, நவ. 6: உர விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள உரங்களின் இருப்பு, விலை விவரங்களை பொதுமக்கள் பார்வைக்குத் தெரியும் வகையில் அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்க வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

சிவகங்கை மாவட்டத்தில் பருவ மழை காரணமாக நெல் மற்றும் இதர பயிர்களின் சாகுபடி தொடங்கியுள்ளது.

இப்போது விவசாயிகள் உரங்களின் விலைகளை தெரிந்துகொள்வது முக்கியமாகும். உரங்களின் விலைகள் (50 கிலோ மூட்டை ஒன்றுக்கு): யூரியா- ரூ.268.14, டிஏபி- ரூ.910, 20:20:0:13 கூட்டு உரம்- ரூ.740, டிஏபி லைட்- ரூ.880, 16:20:0:13 கூட்டு உரம்- ரூ.720, மோனோ அம்மோனியம் பாஸ்பேட்- ரூ.910, மியூரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.)- ரூ.565, சூப்பர் பாஸ்பேட்- ரூ.262.58.

விவசாயிகள் உரங்களை அரசு நிர்ணயித்த விலைக்கே கொள்முதல் செய்வதுடன் தவறாது பில் கேட்டு வாங்க வேண்டும்.

உர விற்பனையாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள உரங்களை உற்பத்தி நிறுவனம் வாரியாக இருப்பு, விலை விவரங்களை அறிவிப்புப் பலகையில் நாள்தோறும் எழுதி விவசாயிகளுக்கு நன்கு தெரியும் இடத்தில் வைக்க வேண்டும்.

அறிவிப்புப் பலகையில் எழுதாமல் உரம் விற்பனை செய்யும் விற்பனையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**உரம் தொடர்பான புகார்களுக்கு...**

First Published : 07 Nov 2011 12:50:50 PM IST

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் தேவையான உரங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பாக புகார் தெரிவிக்க விரும்பினால் சிவகங்கை கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளரை 9750220803 என்ற எண்ணிலும், காரைக்குடி கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளரை 9443443048 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**நெல் பயிரில் கூண்டு புழு தாக்குதலை தடுக்க யோசனை**

First Published : 06 Nov 2011 01:56:11 PM IST

திருவாரூர், நவ. 5: திருவாரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடிப் பயிர்களில் ஆங்காங்கே கூண்டுப் புழுத் தாக்குதல் தென்படுகிறது. இதைத் தடுக்க வேளாண்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கூண்டுப் புழுக்களின் தாக்குதல் இளம் பயிரில் தென்பட்டால் வயலில் உள்ள நீரை வடிகட்டாமல் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் உடன் 25 கிலோ தவிடு அல்லது மணல் கலந்து ஒரு ஏக்கருக்குத் தூவ வேண்டும்.

தூவிய பின்னர் கயிறை இரு நபர் கொண்டு வரிசைக்கு வரிசை இழுத்தால் பயிரின் தண்டுப் பகுதியில் உள்ள கூண்டுப் புழுக்கள் தண்ணீரில் விழுந்து அழிந்து விடும். அதன் பின்னர் 5 அல்லது 10 மணி நேரம் கழித்து தண்ணீரை வடிகட்ட வேண்டும்.

கூண்டுப் புழுவின் தாக்குதல் வளர்ந்த பயிரில் தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு டைகுளோர்வாஸ் 400 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மேற்காணும் தடுப்பு முறைகளைக் கையாண்டு பயன்பெறுமாறு மயில்வாகணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உரத் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டும்: வைகோ**

First Published : 07 Nov 2011 03:33:31 AM IST



சென்னை, நவ. 6: உரத் தட்டுப்பாட்டைப் போக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் நல்ல மழை பெய்துள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். ஆனால் உர விலை அதிகமாக இருக்கிறது.

கடந்த 2010 நவம்பரில் 50 கிலோ கொண்ட பொட்டாசியம் உரம் ரூ.231-க்கு விற்பனையானது. இப்போது ரூ.565-க்கு விற்கிறது. டிஏபி உரம் மூட்டை ரூ.486 என்று இருந்தது இப்போது ரூ.927-க்கும், காம்ப்ளக்ஸ் உரம் ரூ.327 என்பது ரூ.737-க்கு விற்கப்படுகின்றன.

இருப்பினும் கடன்பெற்றாவது இந்த விலையிலும் உரத்தை வாங்கி உரிய நேரத்தில் பயன்படுத்தி விவசாயம் செய்ய விரும்பினாலும், தேவையான உரங்கள் கிடைக்காத அளவு தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே, மத்திய மாநில அரசுகள் உடனடியாக உரத் தட்டுப்பாட்டைப் போக்கி, அனைத்து உரங்களும் தேவையான அளவு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**மேட்டூர் நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியது**

First Published : 07 Nov 2011 05:05:54 AM IST



மேட்டூர் அணையின் உபரி நீர்போக்கியில் நிரம்பியுள்ள தண்ணீர். (உள்படம்) நீர்மட்டம் 100 அடி உயர்ந்ததைக் காட்டும் அணையின் வலதுகரையில் உள்ள அளவுகோல்.

மேட்டூர், நவ.6: காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 61-வது ஆண்டாக 100 அடியை எட்டியது.

÷கடந்த 10 தினங்களுக்கும் மேலாக காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர் அதிகரித்து வந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு திறக்கப்பட்டு வந்த நீரின் அளவும் வினாடிக்கு 1,000 கனஅடியாகக் குறைக்கப்பட்டிருந்தது. இதனால் கடந்த மாதம் 25-ம் தேதி 84.75 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை 100.05 அடியாக உயர்ந்தது.

÷கடந்த 10 நாட்களில் மட்டும் அணையின் நீர்மட்டம் 16.30 அடி உயர்ந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 38,372 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நீர் இருப்பு 64.90 டி.எம்.சியாக உள்ளது.

÷கடந்த ஆண்டு நவம்பர் 12-ம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியாக உயர்ந்தது. அதன் பிறகு கடந்த ஜூன் 29-ம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடிக்குக் கீழே குறைந்தது. டெல்டா பாசனத்துக்கு ஜனவரி 28-ம் தேதிவரை தண்ணீர் திறக்க முடியுமா என்ற கேள்வி எழுந்தபோது மழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் 100 அடியை எட்டியதும் அணையின் இடதுகரையில் உள்ள 16 கண் மதகுப் பகுதியில் காவிரிக்கு சிறப்புப் பூஜை செய்து மலர் தூவப்பட்டது. அணை நீர்மட்டம் 100 அடியாக உயர்ந்துள்ளதால் 16 கண் பாலம் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தந்தனர்.

**பருவ மழை தீவிரம்**

First Published : 06 Nov 2011 04:28:47 AM IST



சென்னையில் சனிக்கிழமை பெய்த கனமழையைத் தொடர்ந்து, வேப்பேரி ஈ.வி.கே.எஸ். சாலையில் பெருக்கெடுத்து ஓடும் நீரில் தத்தளித்துச் செல்லும் வாகனங்கள். (வலது) அட

சென்னை, நவ. 5: தமிழகம் முழுவதும் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. பருவமழை தொடங்கிய காலம் முதல் இப்போது வரை மழை தொடர்பாக நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களில் 40 பேர் பலியாகியுள்ளனர்.

காற்றழுத்தத் தாழ்வு நிலை தமிழக கடலோரப் பகுதிகளில் தொடர்ந்து நீடிப்பதால் மாநிலம் முழுவதும் கனமழை பெய்து வருகிறது. அரபிக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுநிலை

தீவிரமடைந்துள்ளதால், அடுத்த 24 மணி நேரத்துக்கு தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வட தமிழகம் - தெற்கு ஆந்திரத்தை ஒட்டியுள்ள கடல் பகுதியில் உருவான காற்றழுத்தத் தாழ்வுநிலை தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது. அரபிக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுநிலை தீவிரமடைந்துள்ளது. இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் அநேக பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்துக்கு கனமழை தொடரும். சில இடங்களில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்யக்கூடும்.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். விட்டுவிட்டு கனமழை மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றார் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன்.

சனிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் அதிகபட்சமாக செம்பரம்பாக்கம் மற்றும் வத்திராயிருப்பு பகுதிகளில் 60 மில்லி மீட்டர் மழை பெய்தது.

மற்ற இடங்களில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): உசிலம்பட்டி 50, சென்னை, மீனம்பாக்கம் 40, ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, செங்குன்றம், திருவையாறு, அரக்கோணம், ராசிபுரம், வாழப்பாடி, நத்தம் 30, கேளம்பாக்கம், மகாபலிபுரம், திருவள்ளூர், சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், கள்ளக்குறிச்சி, சேலம், கோவை, தேவகோட்டை, சிவகங்கை, சத்திரப்பட்டி 20, சங்கராபுரம், ராஜபாளையம், கோத்தகிரி, உடுமலைப்பேட்டை, ஏற்காடு, தேன்கனிக்கோட்டை, வேலூர், ஒகேனக்கல், தாம்பரம், காஞ்சிபுரம், பொன்னேரி 10.

பலி எண்ணிக்கை உயர்வு: தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களில் இதுவரை 40 பேர் பலியாகி உள்ளனர். உதகை, அரியலூர், தேனி, ராமநாதபுரம், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் தலா மூன்று பேர் இதுவரை இறந்துள்ளனர். பிற மாவட்டங்களில் தலா இரண்டு பேர் மழைக்கு பலியாகி உள்ளனர்.

கனமழையால் சாலையில் ஏற்பட்ட பெரிய பள்ளத்தில் சிக்கி, சென்னையைச் சேர்ந்த சரளா உயிரிழந்தார். சனிக்கிழமை பெய்த மழையால் ஏற்பட்ட இரு வேறு சம்பவங்களில் கடலூர் நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த அஜித்குமார் (13), காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஜெயலட்சுமி (47) ஆகியோர் உயிரிழந்தனர்.

நெற் பயிர்கள் சேதம்: காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நெற்பயிர்கள் சேதம் அடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்த விவரங்களை மாவட்ட ஆட்சியர்கள் வழியாக வருவாய்த் துறை சேகரித்து வருகிறது. இதுவரை, 5 ஆயிரம் ஹெக்டேருக்கும் மேற்பட்ட பயிர்கள் சேதம் அடைந்திருக்கலாம் எனத் தெரிகிறது. முழு விவரங்கள் ஓரிரு நாளில் வெளியாகும் என வருவாய் நிர்வாக ஆணையரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மூழ்கியது: சென்னை நகரில் சனிக்கிழமை காலை முதல் பெய்த கனமழையால் தாழ்வான பகுதிகள் அனைத்தும் மழை நீரால் மூழ்கின.

கோயம்பேடு, அசோக் நகர், கோடம்பாக்கம், வடபழனி, சூளைமேடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் சாலைகளில் முழங்கால் அளவுக்கு மழை தண்ணீர் தேங்கி நின்றது. வாகனங்களை ஓட்ட முடியாமல் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டனர். சில சாலைகளில் இரு சக்கர வாகனங்கள் மூழ்கும் அளவுக்கு தண்ணீர் தேங்கியிருந்தது. இதனால், வாகனங்கள் பழுதுபட்டு நின்றன.

வட சென்னையில் வியாசர்பாடி, பெரம்பூர், அயனாவரம் போன்ற பகுதிகளிலும் மழை நீர் தேங்கி நின்றது. சனிக்கிழமை பெய்த மழையால் சென்னை மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**நெல் பயிருக்கு உரம் கிடைக்காமல் வீராணம் விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,01:10 IST

காட்டுமன்னார்கோவில் : நெற் பயிருக்கு உரம் கிடைக்காமல் வீராணம் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர். காட்டுமன்னார்கோவில் வீராணம் ஏரி மூலம் 70 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெற்று வருகிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால் சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள நெல் வயல்களில் தண்ணீர் தேங்கியது. தற்போது மழை விட்ட நிலையில் தண்ணீர் வடிந்து வருகிறது. இதனால் பயிருக்கு மேலுரம் போட வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் உள்ளனர். ஆனால், யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் உள்ள வேளாண் விற்பனை மையங்களில் உரங்கள் இருப்பு இல்லாததால் தனியார் உரம் விற்பனை மையத்தை விவசாயிகள் நாட வேண்டிய நிலை உள்ளது. சொசைட்டியில் 266 ரூபாய்க்கு கிடைக்கும் யூரியா வெளியில் 360க்கு வாங்க வேண்டியுள்ளது. பொட்டாஷ் வேளாண் மையத்தில் 565 ரூபாய்க்கு விற்பனை செய்வதை, வெளியில் 720 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.தற்போது ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாட்டை பயன்படுத்தி தனியார் உர விற்பனை கடைகளில் உரங்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**விவசாயிகள் குறை தீர்ப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,01:17 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டையில் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் நடந்தது. தனி துணை தாசில்தார் துளசிபாய் தலைமை தாங்கினார். திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை பகுதி விவசாய பிரதிநிதிகள் அய்யங்கார், சீனிவாசன், சத்துருசங்கராம் பேசினர். தொடக்க வேளாண்மை கூட்டுறவு துறை முறையாக நடத்த வேண்டும், விதை தட்டுப்பாட்டை சரி செய்ய வேண்டும், அரசூர்-மலட்டாற்றில் செக் டேம் கட்ட வேண்டும் என விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.தலைமையிடத்து துணை தாசில்தார் உமாமகேஸ்வரன், வட்ட துணை ஆய்வாளர்கள்(நில அளவை) பாக்கியராஜ், ஜோதிலிங்கம், இளநிலை உதவியாளர் சோமசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் கணக்கெடுப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,02:49 IST

நாமக்கல்: ஒன்பதாவது வேளாண் கணக்கெடுப்புக்கான பயிற்சி முகாம், நாமக்கல் எஸ்.பி.எஸ்., திருமண மண்டபத்தில் நடந்தது. இந்தியாவில், 1970ம் ஆண்டு துவங்கி, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடு முழுவதும் வேளாண் கணக்கு எடுப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு, 9வது முறையாக வேளாண் கணக்கெடுப்பு பணி துவங்கப்பட்டுள்ளது. அதில் பணியாற்ற உள்ள அரசு அதிகாரிகள், அலுவலர்கள், ஆர்.ஐ.,க்கள், வி.ஏ.ஓ.,க்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. மண்டல துணை தாசில்தார் சுப்ரமணியன் தலைமை வகித்தார். மண்டல துணை தாசில்தார்கள் செல்வராஜ், சசிகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குனர் ரங்கசாமி, கோட்ட புள்ளியியல் அலுவலர் அய்யனார், வட்டார புள்ளியியல் ஆய்வாளர்கள் சுவாமிநாதன், அகஸ்டின் நாயகம், ராஜேஸ்வரி, அத்யா, உமாவதி ஆகியோர் பங்கேற்று பயற்சி அளித்தனர். பயிற்சியில், வேளாண்மைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலங்கள், பயிரிட்டுள்ள பயிர்கள், நீர் ஆதாரம் மற்றும் நீர் ஆதாரம் இல்லாத நிலையின் விவசாய தன்மை குறித்து விளக்கப்பட்டது. இம்முகாமில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் மூலம் வேளாண் கணக்கெடுப்பு பணி துவங்கும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மழையால் அழுகும் நிலையில் காய்கறிகள் வரத்து குறைவால் விலை கடும் உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,02:53 IST

ஈரோடு: தொடர் மழையால் ஈரோடு மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து குறைந்ததால், விலை உயர்ந்துள்ளது.

தமிழகம் உட்பட சில மாநிலங்களில், 15 நாட்களுக்கு மேலாக பலத்த மழை பெய்வதால், பெரும்பாலான காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. ஈரோடு மார்க்கெட்டில் இரண்டு நாட்களாக தக்காளி 30 முதல் 35 ரூபாய், சிறிய வெங்காயம் 24, 26, 30 ரூபாய், பெரிய வெங்காயம் 20, 28 ரூபாய், சிறிய கேரட் 15 ரூபாய், பெரிய கேரட் 25 ரூபாய், பீட்ரூட், முள்ளங்கி, பீன்ஸ் போன்றவை 20 முதல் 30 ரூபாய், மல்லித்தழை கட்டு 18 முதல் 20 ரூபாய், புதினா கட்டு ஆறு ரூபாய், வாழைக்காய் ஐந்து ரூபாய் என விற்கிறது. விலை உயர்ந்ததுடன், வெங்காயம், தக்காளி, பீன்ஸ், பீட்ரூட், மல்லி, புதினா போன்ற பெரும்பாலான காய்கறிகள் ஓரிரு நாட்கள் கூட வைத்திருக்க முடியாமல், அழுகுகிறது. விற்பனை செய்யும் இடத்திலேயே அழுகும் நிலையில் உள்ள காய்கறிகளை, வியாபாரிகளே அவ்வப்போது சுத்தம் செய்தாலும், அவற்றை வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள் கூறுகையில், "பெரும்பாலான இடங்களில் மழை பெய்வதாலும், லாரி போன்றவைகளில் ஏற்றி வரும் வழிகளிலும் மழை, பனியால் காய்கள் அழுகிவிடுகிறது. அதனால், காய் வந்ததும் நாங்களே பிரித்து எடுத்து, இரண்டு விலையில் விற்பனை செய்கிறோம். மழை நின்று வெயில் வரும் வரை இந்த நிலை நீடிக்கும். 100 கிலோவுக்கு, 10 முதல் 15 கிலோ வரை வீணாகிறது. கிழக்கு வகைகள்தான் பாதிப்பின்றி விற்பனை செய்ய முடிகிறது. மழை மேலும் தொடர்ந்தால், காய்கறி விலை மேலும் உயரும்,' என்றனர்.

**பொள்ளாச்சியில் தக்காளி விலை "கிடுகிடு' உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,04:21 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் பெய்யும் தொடர்மழையினால், சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. இதனால், சில்லரை வர்த்தகத்தில் கிலோ தக்காளி 40 ரூபாய் வரை விலை போகிறது.பொள்ளாச்சி, உடுமலை சுற்றுப்பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு, நாட்டு காய்கறி வரத்துள்ளது. இதில், முக்கோணம், பூலாங்கிணறு, குடிமங்கலம், வடுகபாளையம், வடக்கிபாளையம் உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளிலிருந்து சந்தைக்கு தக்காளி வரத்துள்ளது.சந்தைக்கு வரும் தக்காளியில் கேரளப்பகுதிக்கு 75 சதவீதம் அனுப்பப்படுகிறது. மீதமுள்ள தக்காளி

சுற்றுப்புற பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இந்நிலையில், ஒரு வாரமாக பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.இதில், காய்கறி தோட்டங்களில் மழை நீர் புகுந்ததால், அங்கிருந்த பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தன. பல இடங்களில் பயிரிடப்பட்டிருந்த தக்காளி செடிகளும் நீரில் மூழ்கியதால், இந்தாண்டு எதிர்பார்த்த விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது.இதனால், பொள்ளாச்சி சந்தைக்கும் தக்காளி வரத்து குறைந்துள்ளது. வழக்கமாக 10 டன் வரை தக்காளி வரத்து இருக்கும். ஆனால், தற்போது, மூன்று முதல் நான்கு டன் வரை மட்டுமே தக்காளி வரத்தாக உள்ளது. தக்காளி வரத்து சரிந்துள்ளதால், விலை ஏறுமுகத்தில் உள்ளது.கடந்த வாரம் சில்லரை வர்த்தகத்தில் கிலோ 30 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி தற்போது கிலோ 40 ரூபாய் வரை விற்கிறது. மொத்த வியாபாரத்தில், கிலோ 30 ரூபாய்க்கு விலை போகிறது. விலை ஏற்றம், வரத்து குறைவு உள்ளிட்ட காரணங்களினால், கேரளப்பகுதிகளுக்கு தக்காளி அனுப்புவது பாதிக்கப்பட்டுள்ளது.வரத்துள்ள தக்காளி முழுவதும் பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளுக்கு மட்டும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. அதேபோல், மற்ற நாட்டு காய்கறிகளின் வரத்தும், இங்கிலீஷ் காய்கறிகளின் வரத்தும் சரியத்துவங்கியுள்ளது. இதனால், இவற்றின் விலையும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், "தொடர்மழை காரணமாக பொள்ளாச்சி சந்தைக்கு, தக்காளி வரத்து போதுமானதாக இல்லை. தேவை அதிகரித்துள்ள நேரத்தில் வரத்து குறைந்துள்ளதால், வெளியிடங்களுக்கு தக்காளி அனுப்பப்படுவதில்லை. இதன்காரணமாக, விலை உயர்ந்து வருகிறது. மழை சீசன் முடிந்து, அடுத்த முறை தக்காளி பயிரிடும் வரை தக்காளி வரத்து குறைந்தே இருக்கும். வரத்து தொடர்ந்து குறைந்தால், விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது,' என்றனர்.

**வேளாண் இயந்திரமயமாக்கல் பயிற்சி நவ.,14 முதல் ஒரு வாரம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,01:30 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரமயமாக்கல் குறித்து ஒருவார பயிற்சி வழங்கப்பட உள்ளது.

வேளாண் பொறியியல் துறை வெளியிட்ட அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் மற்றும் கரும்பு பயிர்களுக்கு சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன கருவிகள் மூலமான நீர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் வேளாண் கருவிகளை கையாள்வது குறித்து ஒரு வாரம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் 40 வயதுகுட்பட்ட விவசாயிகள் பங்கேற்கலாம். பயிற்சியின் போது உதவித்தொகை வழங்கப்படும்.

புதுக்கோட்டை டவுன் அம்பாள்புரம் 1ம் வீதியில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் அறந்தாங்கி டவுன் ரங்கோஜிபாவா தெருவில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் இப் பயிற்சி வரும் 14ம் தேதி முதல் தொடர்ந்து ஒருவாரம் வழங்கப்படும்.
பயிற்சியில் பங்கேற்க விரும்பும் புதுக்கோட்டை, விராலிமலை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில், திருவரங்குளம், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் புதுக்கோட்டை வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பெயர்களை முன்பதிவு செய்யலாம். அறந்தாங்கி, அரிமளம், பொன்னமராவதி, திருமயம், ஆவுடையார்கோவில், மணமேல்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அறந்தாங்கி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பெயர்களை முன்பதிவு செய்யலாம். மேலும் தகவல்பெற விரும்புவோர் 04322-221816 என்ற ஃபோன் எண்ணில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**சம்பா, தாளடி பயிர் சாகுபடிக்காக 1,327 டன் உரம் குடந்தை வருகை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,01:22 IST

கும்பகோணம்: ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சம்பா மற்றும் தாளடி நெற்பயிருக்கு தேவையான யூரியா, டி.ஏ.பி., உரங்கள் தனியார் விற்பனையாளர்களுக்காக நேற்று வரவழைக்கப்பட்டது. தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் சம்பா மற்றும் தாளடி நெல் ஒன்பது லட்சம் ஏக்கரில் நடவு செய்யப்படவுள்ளது. இந்த நெற்பயிருக்கு தேவையான யூரியா, டி.ஏ.பி., காம்ப்ளக்ஸ் ஆகிய உரங்கள் ஓமன், இஸ்ரேல் போன்ற நாடுகளிலிருந்து கப்பல் மூலம் சென்னை, தூத்துக்குடி, விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து ரயில் மூலம் தேவையான இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

அதன்படி தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள 400க்கும் மேற்பட்ட தனியார் விற்பனை நிலையங்களுக்காக தூத்துக்குடி ஸ்பிக் உர நிறுவனத்திலிருந்து நேற்று யூரியா, டி.ஏ.பி., காம்ப்ளக்ஸ் ஆகிய உரம் 1,327 டன் 21 ரயில் வேகன்களில் கும்பகோணம் வந்தது.

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 80 லாரிகளில் உர மூட்டைகள் ஏற்றி, தனியார் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டது. இதேபோல் "தனியார் விற்பனையாளர்களுக்காக கடந்த 31ம் தேதி 1300 டன்னும், வரும் 9ம் தேதி, 16ம் தேதி, 23ம் தேதி, 29ம் தேதிகளில் தேவையான உரம் தூத்துக்குடியிலிருந்து டெல்டா மாவட்டத்துக்கு ரயில் மூலம் வரவுள்ளது' என தனியார் உர வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விலை நிலங்களானது விளை நிலங்கள் இடம்பெயரும் சாயல்குடி விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,04:06 IST

சாயல்குடி : விளை நிலங்கள் தரிசு நிலங்களாகவும், விலை நிலங்களாகவும் மாறி வருவதால், ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி மற்றும் சுற்றியுள்ள பகுதி விவசாயிகள், உழவு மாடுகளுடன் ஊரை விட்டு திருநெல்வேலிக்கு செல்ல துவங்கி உள்ளனர்.வானம் பார்த்த பூமியான கடலாடி, சாயல்குடி, கமுதி, முதுகுளத்தூர், தரைக்குடி ஆகியவை நெல், மிளகாய், கடலை விவசாயம் அதிகம் பயிர் செய்யும் பகுதிகள். ஆறு, வரத்துக் கால்வாய்களில் மழை நீர் பார்ப்பது அரிது. பயிர் விளைவித்தாலும், அதிகம், சாவியையே அறுவடை செய்து வருகின்றனர்.இந்நிலை தொடர்வதால், ஆண்டுதோறும் ஐந்து வட்டிக்கு கடன் வாங்கி விவசாயம் செய்து, கடனாளிகள் ஆவோர் எண்ணிக்கை அதிகரித்தது. இதன் விளைவு, விவசாய பரப்பளவு குறைந்து, தரிசு நிலங்கள் அதிகரித்தது. தற்போது விளை நிலங்கள் விலை நிலங்களாகவும், தரிசு நிலங்களாகவும் மாறி வருகிறது. குறுகிய பரப்பளவில் செய்யும் விவசாயத்திற்கு டிராக்டர் பயன்படுத்துவதால், உழவு மாடுகளுக்கு அதிகம் வேலை இல்லை. எனவே, உழவு மாடுகள் வைத்து குடும்பம் நடத்துபவர்கள் மாடுகளுடன் ஊரை காலி செய்து, திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு குடியேற சென்று விட்டனர். இவர்களில் சிலர் கூறுகையில், ""மழை பொய்த்து போனதால் விவசாய கூலியாக சென்றாலும், ஒரு நாளைக்கு 200 ரூபாய் கூலி கிடைக்கிறது. இங்கிருந்தால் இந்த தொகையில் மாட்டிற்கு தீனி போட வேண்டும். இது கட்டுப்படியாகாததால் திருநெல்வேலிக்கு உழவு மாடுகளுடன் நடந்தே செல்கிறோம். அங்கு தினக்கூலி 350 ரூபாய் வரை கிடைக்கிறது. தங்க இடமும், சாப்பாடும், மாடுக்கு தீனியும் நில உரிமையாளரே வழங்கி விடுகிறார், என்றார்.

**தேங்காய்க்கு போதிய விலை இல்லாததால்... நஷ்டத்தில் தள்ளாடும் ஸ்ரீவி.,விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,04:14 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : தேங்காய்க்கு போதிய விலை கிடைக்காததால் தென்னை விவசாயிகள் நஷ்டத்தால் பாதிக்கப்படுகின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூரில் மம்சாபுரம், செண்பகதோப்பு, வத்திராயிருப்பு, கூமாபட்டி உட்பட சுற்று பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் தென்னை விவசாயம் நடக்கிறது. கடந்த ஓராண்டாக சரிவர மழை இல்லாத நிலையில், குறைந்தளவு கிணற்று நீரை பாய்ச்சி விவசாயம் செய்தனர். தற்போது தேங்காய்க்கு போதிய விலை இல்லை . வெளி மார்க்கெட்டில் 4 ரூபாய் முதல் 15 வரை விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு செலவுக்கு தகுந்த படி போதிய விலை கிடைக்காததால் நஷ்டத்தால் பாதிக்கின்றனர். விவசாயி மாரிச்சாமி கூறுகையில்,"" தென்னைகளில் குறைவாகவே காய்கள் விளைகின்றன. கூலி, உரங்களின் விலை அதிகரித்துள்ளன. ஆனால் வியாபாரிகள் மிக குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து வெளி மார்க்கெட்டில் அதிகவிலைக்கு விற்கின்றனர். கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த இரு வாரங்களுக்கும் முன் ரூ.5 ,கடந்த சில நாட்களாக 3 ரூபாய் 50 காசுக்கு கொள்முதல் செய்து,வெளி மார்க்கெட்டில் 15 ரூபாய் வரை விற்கின்றனர்," என்றார்.

**நெல்லையில் தொடர் மழை காரணமாக 2 ஆயிரம் ஹெக்டேர் நெற்பயிர் சேதம் : கலெக்டர் செல்வராஜ் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,02:36 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர் சேதமடைந்துள்ளது என கலெக்டர் செல்வராஜ் தெரிவித்தார். நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்தது. தொடர் மழையால் மாவட்டம் முழுவதும் அறுவடைக்கு தயாராக இருந்த கார் சாகுபடி நெல் வயல்களில் தண்ணீர் புகுந்தது. பாளையங்கால்வாய் பாசனப்பகுதி வயல்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் முளைக்க துவங்கின. வயல்களில் தண்ணீர் புகுந்ததால் அறுவடை இயந்திரங்கள் மூலம் நெல் அறுவடை செய்ய இயலாமல் விவசாயிகள் தவித்தனர். ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து மேற்கொண்ட நெல் சாகுபடி தொடர் மழையால் நஷ்டமடைந்ததாக விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். மழையில் சேதமடைந்த பயிருக்கு நஷ்டஈடு வழங்க அரசை வலியுறுத்தி வருகின்றனர். கலெக்டர் செல்வராஜ் நேற்று கூறும்போது, ""நெல்லை மாவட்டம் முழுவதும் தொடர்மழை காரணமாக சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில்

பயிரிடப்பட்ட நெற்பயிர் சேதமடைந்தது முதற்கட்ட ஆய்வில் தெரியவந்தது. வருவாய்துறை அதிகாரிகள் விசாரணைக்கு பின் சேத நிலவரம் முழுமையாக தெரியவரும்" என்றார். கடந்த சில நாட்களாக நெல்லையில் மழை பெய்யவில்லை. மாவட்டத்தில் பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளுக்கு போதுமான தண்ணீர் வரத்து இல்லை. தொடர்ந்து மழை பெய்யாவிட்டால் கோடைக்காலத்தில் மாவட்டம் முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும், விவசாயப்பணிகள் பாதிக்கப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**பரும்பு பகுதியில் முழு நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,01:03 IST

ஆழ்வார்குறிச்சி : பரும்பு கிராமத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் கிடைத்திடவும், முழுமையாக கணக்கெடுப்பு நடத்தவும் விவசாயிகள் வேணடுகோள் விடுத்துள்ளனர். வடகிழக்கு பருவமழை காரணமாக சில நாட்களாக பெய்து வந்த மழையினால் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் அறுவடை செய்ய முடியாத நிலைமையில் விளை நிலங்கள் முழுமையாக தண்ணீரில் மூழ்கிவிட்டது. இதில் ஆழ்வார்குறிச்சி பிர்கா பரும்பு பகுதியில் அதிகளவில் பயிர்கள் சேதமடைந்துள்ளது. பல இடங்களில் பயிர்கள் மீண்டும் முளைக்க துவங்கிவிட்டது. இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் விவசாய அதிகாரிகள், அரசிடம் பாதிக்கப்பட்ட விபரங்களை எடுத்துக் கூறி முழுமையான நிவாரணம் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த முறை ஆழ்வார்குறிச்சி பகுதியில் குருத்துப்பூச்சி தாக்கியதில் முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் பல விவசாயிகள் மிகவும் நஷ்டமடைந்தனர். இந்நிலை ஏற்படாமலிருக்க பாதிக்கப்பட்ட நிலவரங்களின் முழுமையான தகவல்களை விவசாய அதிகாரிகள் அரசின் கவனத்திற்கு எடுத்து செல்ல வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மழையால் அழுகிய பூக்கள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,00:56 IST

பல்லாவரம்:கவுல் பஜாரில், கனமழை காரணமாக, விளை நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால், 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பூக்கள், காய்கறிகள் அழுகி வருகின்றன.

இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.சென்னை விமான நிலையத்திற்குப் பின்புறம் இருப்பது, கவுல் பஜார் ஊராட்சி. இங்கு, விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. மல்லி, முல்லை, ரோஜா, சாமந்தி ஆகிய பூக்கள் மற்றும் அனைத்து வகையான காய்கறிகளும், இங்கு பயிரிடப்படுகின்றன.

தற்போது, 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் பூக்களும், அவரை, வெண்டை, மிளகாய், புடலங்காய், கத்தரிக்காய் மற்றும் அரைக் கீரை, முளைக் கீரை உள்ளிட்ட கீரை வகைகளும், சாகுபடி செய்யப்பட்டுள்ளன.கடந்த சில தினங்களாக, தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், கவுல் பஜாரில் உள்ள விளை நிலங்களில், மழை நீர் தேங்கி நிற்கிறது. ஆற்றை ஒட்டிய பகுதி என்பதால், இங்கு, அவ்வளவு விரைவில் மழைநீர் வடிய வாய்ப்பில்லை. இதனால் காய்கறி, கீரை, பூக்கள் அழுகத் துவங்கியுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இது குறித்து பேசிய விவசாயி இளங்கோ, கவுல் பஜாரில் நெற்பயிர்களைக் காட்டிலும், காய்கறி, பூக்கள் தான் அதிகமாக விவசாயம் செய்யப்படுகின்றன. அதிலும், கொடிப் பயிர்கள் அதிகமாக உள்ளன. கொடிப் பயிர்களைப் பொறுத்த வரையில், மழைக்கு எப்போதும் தாங்காது.
தற்போது பயிரிடப்பட்டுள்ள கொடிப் பயிர்கள், கனமழை காரணமாக அழுகி வருகிறது. இதனால், விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படும்" என்றார்.

**தூரல் மழையால் விவசாயிகள்...பனமரத்துப்பட்டி ஏரியில் வறட்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,01:24 IST

பனமரத்துப்பட்டி: போக்கு காட்டும் பருவ மழையால், பனமரத்துப்பட்டி ஏரிக்கு நீர்வரத்து இன்றி முற்புதர் மண்டி வறண்டு கிடக்கிறது. தற்போது ஏற்பட்ட புயல் மழையால், ஏரி நிரம்பும் என எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. வறண்டு கிடக்கும் ஏரியை, நேற்று கலெக்டர் மகரபூஷணம் ஆய்வு செய்தார்.சேலம் மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, 1911ம் ஆண்டு ஜருகுமலை அடிவாரத்தில், 2,700 ஏக்கர் பரப்பளவில் பனமரத்துப்பட்டி ஏரியை, ஆங்கிலேயர்கள் உருவாக்கினர். சேலம் மாநகர், ராசிபுரம் நகராட்சி, பனமரத்துப்பட்டி, மல்லூர் பேரூராட்சி பகுதி மக்களின் குடிநீர் தாகத்தை தீர்த்த ஏரி, 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் செழிக்கவும் உதவியது.மழைக்காலங்களில், பனமரத்துப்பட்டி ஏரிக்கு, ஜருகுமலை, ஜல்லூத்துமலை, போதமலை, கிடமலை உள்ளிட்ட பகுதியில் இருந்து காட்டாற்று மழைநீர் வந்தடையும். தற்போது, மழைநீர் வரும் வழித்தடங்கள், ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கி, பாதை மாறியதால், மழை நீர் ஏரிக்கு வருவதில் தடை ஏற்பட்டது.
மேலும், கடந்த சில ஆண்டுகளாக, பனமரத்துப்பட்டி பகுதியில் போதிய மழை பெய்யாததால், நீர்

வரத்து இன்றி ஏரி வறண்டுபோய் உள்ளது. இதை பயன்படுத்தி, ஏரியில் இருக்கும் மண், மணல், பச்சை மரங்கள் போன்றவைகள் அனுமதியின்றி கடத்திச் செல்லப்படுகிறது.இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக தமிழகத்தை மிரட்டிய புயல் மழையால் பல்வேறு பகுதிகளின் ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பியுள்ளது. ஆனால், பனமரத்துப்பட்டி பகுதியில் மழை பெய்யாததாலும், நீர்வரும் பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாலும், ஏரிக்கு மழை நீர் வரும் பாதையில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் நிரம்பாமல் உள்ளது. இதனால், நடப்பாண்டிலும், பனமரத்துப்பட்டி ஏரி நிரம்புவது கேள்விக்குறியாகி உள்ளது.நேற்று, வறண்டு கிடக்கும் பனமரத்துப்பட்டி ஏரியை ஆய்வு செய்த கலெக்டர் மகரபூஷணம், ""மழையினால் மாவட்டத்தில் உள்ள பல ஏரிகள் நிரம்பியுள்ள நிலையில், பனமரத்துப்பட்டி ஏரிக்கு மட்டும் ஏன் தண்ணீர் வரவில்லை," என, அதிகாரிகளிடம் கேட்டார்.இதுகுறித்து பனமரத்துப்பட்டி ஏரி பாதுகாப்பாளர் சங்க தலைவர் சண்முகம் கூறியதாவது:கடந்த ஐந்து ஆண்டுகளாக கனமழை பெய்யாததால், பனமரத்துப்பட்டி ஏரிக்கு தண்ணீர் வராமல் வறண்டு கிடக்கிறது. தற்போது ஏற்பட்ட புயல் மழையால் ஏரி நிரம்பும் என, விவசாயிகள் எதிர்பார்த்தனர்.ஆனால், இப்பகுதியில் புயல் மழை தூரலோடு ஏமாற்றி விட்டதால், ஏரிக்கு தண்ணீர் வரவே இல்லை. பனமரத்துப்பட்டி ஏரிக்கு நீர் வரத்து இல்லாததால், இப்பகுதியில் விவசாயம் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. மேலும், கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

### மேட்டூர் சரகத்தில் 12 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்ப்பு

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,01:21 IST

மேட்டூர்: தமிழக முதல்வர் ஜெ., பிறந்தநாளை முன்னிட்டு, பள்ளி, கல்லூர், கோவில் வளாகத்தில் நடவு செய்வதற்காக மேட்டூர் வனசரகம் சார்பில் ,12 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது.தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் ஃபிப்ரவரி 24ம் தேதி வருகிறது. முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி, கல்லூரி, கோவில் வளாகத்திலும், பொது இடங்களிலும் மரக்கன்று நட வனத்துறை ஏற்பாடு செய்துள்ளது.இதற்காக மாநிலம் முழுவதும் தங்கள் எல்லைக்கு உள்பட்ட பகுதியில் நடவு செய்வதற்காக, தமிழக வனச்சரகங்களில் வாகை, பலா, வேம்பு, புங்கன், நெல்லி, சரகொன்றை உள்ளிட்ட நிழல்தரும் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் வனச்சரகத்தில், 12 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது. மரக்கன்றுகள் அனைத்தும் முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு மேட்டூர் வனச்சரகத்துக்கு உள்பட்ட மேட்டூர், இடைப்பாடி, சங்ககிரி தாலுகாவில் உள்ள அரசு, தனியார் பள்ளி, கல்லூரி, கோவில்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

## பயறுவகை பயிர்களில் இரட்டிப்பு மகசூல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,00:18 IST

தர்மபுரி: பயறுவகைப் பயிர்களில் இரட்டிப்பு மகசூல் பெற மண்ணாய்வு அடிப்படையில் புதிய உரமேலாண்மை தொழில்நுட்பத்தை கடைபிடிக்குமாறு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.தர்மபுரி வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்ட அறிக்கை:பயறு வகை பயிர்களில் கூடுதல் மகசூல் பெற மிதவெப்ப மண்டல பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைப்படி கொள்ளு சாகுபடி செய்ய ஏக்கருக்கு 4.5 கிலோ யூரியா, 11 கிலோ டி.ஏ.பி., ஏழு கிலோ மூரியேட் ஆப்பொட்டாஷ், 80 கிலோ ஜிப்சம் ஆகியவற்றை விதைப்புக்கு முன் அடியுரமாக இட வேண்டும்.விதைப்பு முடிந்தவுடன் மண்ணின் மேற்பரப்பில் ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க்சல்பேட், 20 கிலோ காப்பர்சல்பேட் மற்றும் 2கிலோ போராக்ஸ் நுண்ணூட்ட சத்துக்களை எருவுடன் கலந்து மேலாக இட வேண்டும்.தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை சராசரியாக 316.7 மில்லிமீட்டர் மழை கிடைக்கும். இதுவரை 174.25 மில்லிமீட்டர் மழை கிடைத்துள்ளது.இதனால், கிணறு பாசனப்பகுதிகளில் ஓரளவுக்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இந்நேரங்களில் நெல் நாற்றுவிடும் பணி, நடவுப்பணி மற்றும் மேலுரமிட்டு களையெடுக்கும் பணி ஆகியவை நடந்து வருகின்றன.நெல் நாற்றுவிடும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்திட ஏதுவாக ஏக்கருக்கு இரண்டு கிலோ விதையை விதை நேர்த்தி செய்து, ஒரு சென்ட் பரப்பில் மேட்டுப்பாத்தி அமைத்து நாற்றுவிட வேண்டும்.திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்துள்ள விவசாயிகள் நடவு செய்த 10ம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று அல்லது நான்கு முறை கோனா களைக்கருவி கொண்டு களை நீக்கம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் பழைய வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் தோன்றும். இதனால், அதிக தூர்கள் வெடிக்கும்.அனைத்து தூர்களும் உற்பத்தி தூர்களாக உருவாகும். நடவு செய்த 20ம் நாள் மேலுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து தரவல்ல 33 கிலோ யூரியா மற்றும் ஐந்து கிலோ சாம்பல் சத்து தரவல்ல 8.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இட்டு களைக்கருவி மூலம் களையெடுக்க வேண்டும்.கரும்பு அறுவடைப்பணி துவக்கியுள்ளதால், கூடுதல் மகசூல் பெற வெட்டுக் கோடாரி கொண்டோ அல்லது முனையில்லாத கொடுவால் கொண்டோ தரை மட்டத்துக்கு அறுவடை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஏக்கருக்கு இரண்டு முதல் மூன்று டன் மகசூல் கூடுதலாக கிடைப்பதோடு சர்க்கரை கட்டுமானமும் கூடும்.மானாவாரியாக நிலக்கடலை, சாமை ஆகிய பயிர்கள் அறுவடை நடந்தவுடன், இரண்டாம் பயிராக செம்மண் பகுதிகளில் கொள்ளும், கரிசல் மண் பகுதிகளில் கொண்டைக் கடலை மற்றும் கொத்தமல்லி ஆகிய பயிர்களை பயிரிடும்போது உயிர் உரநேர்த்தி செய்து விதைப்பு செய்ய வேண்டும். கொள்ளு பயிருக்கு ஏக்கருக்கு தேவையான எட்டு கிலோ விதைக்கு தலா ஒரு பாக்கெட்

பயறுவகை ரைசோபியம் மற்றும் பாஸ்போ பேக்டீரியாவும், கொண்டைகடலைக்கு ஒரு ஏக்கருக்கு 16 கிலோ விதைக்கு தலா இரண்டு பாக்கெட் ரைசோபியம் மற்றும் பாஸ்போபேக்டீரியாவும் ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

**மரவள்ளி கிழங்கு அரவைக்கு உத்தரவு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,00:18 IST

அரூர்: அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் உள்ள தனியார் மரவள்ளி கிழங்கு அரவை மில்லில் வாரம் ஒரு நாள் அரவை பணி துவங்க உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கை பயிரிட்டுள்ளனர். தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. மழை அதிகளவு பெய்து மரவள்ளி கிழங்கில் தண்ணீர் தேங்கி நின்றால் மரவள்ளி கிழங்கு அழுகி வீணாகும நிலை ஏற்படும். இதனால், விவசாயிகள் மரவள்ளி கிழங்கை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் உள்ள விவசாயிகள் மரவள்ளி கிழங்கை அறுவடை செய்து பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள ஒரு தனியார் மில்லில் தான் பெருமளவில் விற்பனை செய்வது வழக்கம். தற்சமயம் மின்சார தட்டுப்பாடு காரணமாக அந்த மில்லில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் செய்யப்படவில்லை.இது குறித்து மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயி சங்கத்தினர் கலெக்டரை சந்தித்து மரவள்ளி கிழங்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு அளித்தனர். நேற்று முன்தினம் மாலை பாப்பிரெட்டிப்பட்டி தாசில்தார் அலுவலகத்தில் மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்கள் விவிவசாயிகள் சங்கத்தினர் ஆலை நிர்வாகத்தினர் கலந்து கொண்ட பேச்சுவார்த்தை கூட்டம் நடந்தது.ஆர்.டி.ஓ., காமராஜ், தாசில்தார் பழனிச்சாமி, மின்வாரிய செயற்பொறியாளர் ஜெயா, உதவி செயற்பொறியாளர் சிவசங்கரன், வேளாண்மை அலுவலர் ராமசாமி, வாணியாறு நீர் பாசன சங்கத்தலைவர் சுப்ரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.ஆலையின் நிர்வாகம் தரப்பில் தற்போது 80 சதவீதம் மின்சாரம் மட்டுமே வழங்கப்படுவதாகவும், 100 சதவீதம் மின்சாரம் ஒதுக்கீடு வரப்பெற்றால் தான் மின் அரவை செய்ய இயலும் என தெரிவிக்கப்பட்டது.ஆலையின் நிர்வாகம் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மின் விலக்கு கோரி மின்சாரத்துறைக்கு கோரிக்கை பெறப்பட்டால் 100 சதவீதம் மின்சாரம் வழங்க பரிந்துரைக்கப்படும் என மின்வாரிய உதவி செயற்பொறியாளர் தெரிவித்தார்.தற்போது, விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு நேற்று முதல் மரவள்ளிக்கிழங்கு அரவை துவங்க ஆலை நிர்வாகம் சார்பில் சம்மதம்

தெரிவிக்கப்பட்டது. மேலும் தொடர்மழை பெய்து மரவள்ளி கிழங்குக்கு பாதிப்பு ஏற்பட்டால் நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என அரூர் ஆர்.டி.ஓ., காமராஜ் தெரிவித்தார்

**பசுமை குடோன் மானியம் நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,00:28 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பசுமை குடோன் அமைக்க தோட்டக்கலைத்துறை சார்பில் வழங்கப்படும், 50 சதவீத மானியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், ரோஜா மலர் சாகுபடி பரபரப்பு குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவில் அதிகளவு ரோஜா மலர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் தாலுகாவில் ஓசூர், அமுதகொண்டபள்ளி, பேரிகை, பாகலூர், உத்தனப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் ஆண்டு முழுவதும், 5,000 ஏக்கரில் ரோஜா மலர் சாகுபடி நடக்கிறது.ரோஜா மலர் சாகுபடியை பொறுத்தவரை, உள்ளூர் சந்தைகளை குறி வைத்து திறந்த வெளி சாகுபடியிலும், வெளிநாடுகள், வெளிமாநில ஏற்றுமதிக்காக, "கிரீன் ஹவுஸ்' (பசுமை குடோன்) முறையில் விவசாயிகள் சாகுபடி பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.
"கிரீன் ஹவுஸ்' முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு தோட்ட கலைத்துறை மூலம் பல்வேறு மானிய உதவிகள் வழங்கியது. 1,000 சதுர மீட்டருக்கு கிரீன் ஹவுஸ் அமைக்க, 7 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. இவற்றில் தோட்டக்கலைத்துறை, 50 சதவீதம், 3 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கியது.இது தவிர செடிகள், உரங்களுக்கும் தோட்டக்கலைத்துறை மானிய உதவிகள் வழங்கியது. சிறு, குறு விவசாயிகளும் பெரும் விவசாயிகளை போல் "கிரீன் ஹவுஸ்' முறையில் ரோஜா மலர் சாகுபடியில் ஈடுபட, அரசு மானிய உதவி போக மீதி பணத்துக்கு வங்கிக் கடனும் வழங்கப்பட்டது.இதனால், ஓசூர் தாலுகாவில், "கிரீன் ஹவுஸ்' சாகுபடி பரப்பு அதிகரித்து வந்தது. வெளிநாட்டு மலர் ஏற்றுமதியும் உயர்ந்தது. கடந்த சில ஆண்டாக வங்கி கடன் பெற்ற சிறு, குறு மலர் விவசாயிகள், அந்த கடனை அரசு தள்ளுபடி செய்யும் என்ற எதிர்பார்ப்பில் திருப்பி செலுத்தாமல் இழுத்தடித்து வருகின்றனர்.இதனால், இரு ஆண்டாக வங்கிகள், ரோஜா விவசாயிகளுக்கு கடன் வழங்குவதை முற்றிலும் நிறுத்தி வைத்துள்ளது. கடந்த சட்டசபை தேர்தலையொட்டி, தோட்டக்கலைத்துறை "கிரீன் ஹவுஸ்' சாகுபடிக்கு வழங்கி வந்த, 50 சதவீதம் மானிய உதவிகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. தேர்தல் முடிந்த பின்பும் நிறுத்தி வைத்த "கிரீன் ஹவுஸ்' மானிய உதவிகளை தோட்டக்கலைத்துறை வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. இதனால், விவசாயிகள் "கிரீன் ஹவுஸ்' முறையில் ரோஜா மலர் சாகுபடியில் ஈடுபட முடியாமல் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.ஏற்கனவே, வங்கிக் கடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில்,

மானிய உதவியும் வழங்காமல் தோட்டக்கலைத்துறை இழுத்தடித்து வருவதால், "கிரீன் ஹவுஸ்' சாகுபடி பரப்பு குறைந்து வெளிநாட்டு ரோஜா மலர் ஏற்றுமதி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

**நிரம்பியது சிறுவாணி அணை வராது குடிநீர் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 07,2011,01:31 IST

கோவை : "சிறுவாணி அணை நிரம்பியுள்ளதால், வரும் கோடையில், கோவை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை' என்று, அதிகாரிகள் தெரிவித்தனர். இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சிறுவாணி அணையில் இருந்து கோவை மாநகர மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில நாட்களாக பெய்த கனமழையால், அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று இரவு, அணை நிரம்பியது. இந்த அணையின் மொத்த உயரம், கடல் மட்டத்தில் இருந்து 878.55 மீட்டர். தற்போது 878.50 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. அணையில் 49.54 அடிக்கு தண்ணீர் தேக்கி வைக்க முடியும். தற்போது இந்த அளவுக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. அணையில் இருந்து தினமும் ஒரு கோடியே ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர், குடிநீர் தேவைக்காக எடுக்கப்படுகிறது. "சிறுவாணி அணை நிரம்பியுள்ளதால், அடுத்த ஆறு மாதங்களுக்கு கோவையிலும், வழியோர குடியிருப்புகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. தண்ணீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில், அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படும்' என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,22:10 IST

மடத்துக்குளம் : மடத்துக்குளம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மழைக்கால நோய்களை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறையினர் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர். மடத்துக்குளம் அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் தற்போது ஏடிடி (ஆர்) 45.,மற்றும் ஏடிடி 39 ரக நெல் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக பெய்த மழைக்கு பின் படைப்புழு, கூண்டுப்புழுக்களின் தாக்குதல் நெற்பயிர்களில் அதிகமாக உள்ளது. படை புழுக்கள் இரவு நேரத்தில் நெற்பயிர்களை தாக்குகின்றன. இந்த தாக்குதலால் நெற்பயிர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு

400 மிலி., குளோரிபைரிபாஸ் மருந்தினை 200 லிட்டர் தண்ணீர் மற்றும் ஒட்டு திரவங்களுடன் கலந்து கைத்தெளிப்பான் மூலம் பயிர்கள் முழுவதும் நனையும் படி மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். இந்த முறையால் படைப்புழு தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த முடியும். வடிகால் வசதி இல்லாமல் தண்ணீர் அதிகம் தேங்கி உள்ள வயல்களில் கூண்டுப்புழுக்கள் அதிக சேதம் விளைவிக்கும். இதனை கட்டுப்படுத்த, வயலில் தேங்கியுள்ள தண்ணீரை வடித்த பின் ஏக்கருக்கு 400 மிலி மோனோகுரோட்டாபாஸ் மருந்து தெளித்தால் கூண்டுப்புழுக்களை கட்டுப்படுத்தலாம். இத்தகவலை வேளாண்மைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**திராட்சை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,22:03 IST

பேரூர் : கோவையில் மழையின் தாக்கம் குறைந்ததால், புறநகரில் திராட்சை விலை அதிகரித்துள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமானதால், புறநகர் பகுதியான பேரூர், தொண்டாமுத்தூர், மாதம்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பயிரிடப்பட்டிருந்த திராட்சை பழங்கள் பாதிக்கப்பட்டன. மழையால் திராட்சை விவசாயம் 90 சதவீதம் முடங்கி, அறுவடை பணியும் பாதித்தது. திராட்சை கொடியில் பிஞ்சு மற்றும் பழக்கொத்துகளில் மழைநீர் படிந்திருந்ததால், ஏராளமான பழங்கள் வெடித்து பூ, பிஞ்சு அழுகியது. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. மார்க்கெட்டுக்கு கொண்டுசெல்லப்படும் எண்ணிக்கை குறைந்தது. இதனால், ஒரு கிலோ திராட்சை ரூ. 18க்கும், ஆறு கிலோ கொண்ட திராட்சை பெட்டி ரூ. 90க்கும் விற்பனையானது. கடந்த இரு நாட்களில் மழையின் தாக்கம் சற்று குறைந்துள்ளதால், தற்போது ஒரு கிலோ திராட்சை ரூ. 26க் கும், ஆறு கிலோ கொண்ட திராட்சை ரூ. 120க்கும் விற்பனையாகிறது.

**பீட்ரூட் கொள்முதல் விலை உயர்வு : விவசாயிகள் உற்சாகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,00:52 IST

பல்லடம் : பீட்ரூட் கொள்முதல்விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். ஜல்லிப்பட்டி, கேத்தனூர், செலக்கரிச்சல், சித்தம்பலம், சுல்தான்பேட்டை, கரடிவாவி, செஞ்சேரிமலை உட்பட பல இடங்களில் 2,000 ஏக்கர் பரப்பளவில் பீட்ரூட் சாகுபடி செய்யப்பட்டுள்ளது; பல்லடம் பகுதியில் விளையும் பீட்ரூட் திருப்பூர், கோவை, தாராபுரம் மற்றும் கேரளாவுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் பல்லடம் பகுதி விவசாயிகளிடம்

ஒரு கிலோ பீட்ரூட் ஆறு ரூபாய்க்கு, வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் தொடர்மழையால் பீட்ரூட் சாகுபடி செய்யப்பட்டு இருந்த பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் தேங்கி ஒரு ஏக்கருக்கு 20 சதவீதம் அளவுக்கு பீட்ரூட் செடிகள் அழுகியது. இதனால் வழக்கத்தை விட பீட்ரூட் விளைச்சல் குறைந்தது. ஆனால், மார்க்கெட்டுகளில் பீட்ரூட்டுக்கு பொதுமக்களிடம் கிராக்கி நிலவுகிறது. கடந்த மாதம் விவசாயிகளிடம் ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட பீட்ரூட் தற்போது கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்த்தி, ஒன்பது ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மழையால் பீட்ரூட்களில் சற்று அழுகல் ஏற்பட்டு உற்பத்தி பாதிப்பு அடைந்த போதும், கொள்முதல் விலை உயர்ந்துள்ளதால், பல்லடம் பகுதியில் உள்ள பீட்ரூட் உற்பத்தி விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

**மழையால் தக்காளி விலை இரு மடங்கு உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,22:13 IST

அனுப்பர்பாளையம் : தொடர் மழையால் வரத்து குறைந்துள்ளதால், தக்காளி விலை இரு மடங்கு அதிகரித்துள்ளது. திருப்பூர், 15 வேலம்பாளையம் அங்கேரிபாளையம் ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை உள்ளது. திருப்பூர், புளியம்பட்டி, அவிநாசி, சத்தி, குன்னத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், காய்கறி உள்ளிட்ட பல்வேறு பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்வர். தற்போது தொடர் மழையால் காய்கறி வரத்து குறைந்துள்ளது. இதனால், விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. பெரிய வெங்காயம் 10 ரூபாயில் இருந்து 16 ஆகவும், சின்ன வெங்காயம் 10ல் இருந்து 20 ரூபாயாகவும், தக்காளி 20ல் இருந்து 40 ரூபாயாகவும், கத்தரி 10ல் இருந்து 40 ரூபாயாகவும், உருளை 20ல் இருந்து 25 ரூபாயாகவும், கேரட் 15ல் இருந்து 20 ரூபாயாகவும், பீன்ஸ் 20ல் இருந்து 25 ரூபாயாகவும், கேரட் 15ல் இருந்து 20 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. வியாபாரி ஒருவர் கூறுகையில், "கேரட், பீன்ஸ், சவ்சவ், முட்டைக்கோஸ், உருளை, இஞ்சி ஆகியவை ஊட்டியில் இருந்து வருகின்றன. தற்போது தொடர் மழை, நிலச்சரிவு, போக்குவரத்து தடையால் காய்கறி வரத்து வெகுவாக குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. மழையால் வெங்காயம், தக்காளி போன்றவை அழுகி விடுகின்றன. கத்தரியில் பூ உதிர்ந்து விடுகிறது. விளைச்சல் குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளது,' என்றார்.

**ரப்பர் உற்பத்தி கேரளாவில் அதிகம் "உபாசி' அறிக்கையில் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,00:52 IST

குன்னூர் : "தென்னிந்திய ரப்பர் உற்பத்தியில் கேரளாவின் பங்களிப்பு 78 சதவீதம் உள்ளது,' என "உபாசி' தெரிவித்துள்ளது. தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம்(உபாசி) வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தென்னிந்திய தோட்ட தொழிலில் ரப்பர் தொழிலில் கேரளா முக்கியப் பங்காற்றுகிறது. கடந்த 2010-11ல் இந்திய அளவில் 6 லட்சத்து 61 ஆயிரத்து 980 எக்டர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 8 லட்சத்து 61 ஆயிரத்து 950 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது; இதன் மதிப்பு, 16 ஆயிரத்து 249 கோடி ரூபாய். இதில், தென்னிந்தியாவில் மட்டும் 5 லட்சத்து 69 ஆயிரத்து 245 ஹெக்டர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 8 லட்சத்து 22 ஆயிரத்து 750 டன் உற்பத்தி செய்யப்பட்டது; இதன் மதிப்பு, 15,509 கோடி ரூபாய். இதில், தமிழகத்தில் 19 ஆயிரத்து 355 எக்டர் பரப்பளவில் தேயிலை சாகுபடி செய்யப்பட்டு, 471 கோடி ரூபாய் மதிப்பள்ள 25 ஆயிரம் டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது; இந்திய அளவில் ரப்பர் உற்பத்தியில் இது 2.9 சதவீதம் மட்டுமே; மொத்த வருமானத்தில் இது 2.9 சதவீதம் மட்டுமே. கேரளாவில் மட்டும் 5 லட்சத்து 17 ஆயிரத்து 475 ஹெக்டர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி செய்யப்பட்டு, 14 ஆயிரத்து 619 கோடி ரூபாய் மதிப்புள்ள 7 லட்சத்து 75 ஆயிரத்து 500 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, இந்திய ரப்பர் உற்பத்தியில் 78.2 சதவீதம்; மொத்த வருமானத்தில் இது 90 சதவீதம். கர்னாடகாவில் 32 ஆயிரத்து 415 எக்டர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி செய்யப்பட்டு, 419 கோடி ரூபாய் மதிப்புள்ள 22 ஆயிரத்து 250 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டுள் ளது. இந்திய மொத்த ரப்பர் உற்பத்தியில் இது 4.9 சதவீதம்; மொத்த வருமானத்தில் இது 2.6 சதவீதம். இவ்வாறு, "உபாசி' அறிவித்துள்ளது.

**உழவர் அட்டை வழங்குவதில் இடையூறு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,00:52 IST

கோத்தகிரி : "கோத்தகிரி பகுதியில் தகுதிவாய்ந்த விவசாயிகளுக்கு தடையின்றி உழவர் அட்டை வழங்கவேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது. கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் கிருஷ்ணன் மாநில முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு: சமூக நலத்துறை மூலம் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் உழவர் அட்டை, அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த தி.மு.க., ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட உழவர் அட்டைகளை திரும்ப ஒப்படைத்து, புதிய உழவர் அட்டை பெறவேண்டும்

என்ற நிலை உள்ளது. ஆனால், தி.மு.க., ஆட்சியில் வழங்கப்பட்ட உழவர் அட்டை பெரும்பாலான விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. உழவர் அட்டை இல்லாத விவசாயிகள் புதிய அட்டை பெறுவதில் இடையூறு உள்ளது. எனவே, தற்போது வழங்கப்படும் புதிய உழவர் அட்டையை எவ்வித நிர்பந்தம் இல்லாமல் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிடவேண்டும்.

**உரங்களுக்கு கூடுதல் விலை வசூல் அரசு நிர்ணய பட்டியல் வெளியீடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,22:49 IST

சிவகங்கை : விவசாயிகளிடம் உர விற்பனையாளர்கள் கூடுதல் விலைக்கு விற்பதாக புகார் எழுந்ததையடுத்து, வேளாண்துறை உர விலையை வெளியிட்டுள்ளது.மத்திய அரசு, உர உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செலவு, உரத்தின் சத்திற்கு தகுந்தாற் போல் மானியம் வழங்கியது.மேலும், தயாரிப்பு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பதையும் மத்திய அரசே நிர்ணயித்தது. தற்போது உரத்தின் தன்மைக்கேற்ப மானியம் வழங்குவதை கடந்த மாதம் மத்திய அரசு மாற்றி அமைத்தது. உரத்தின் தரம், சத்து ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிப்பு நிறுவனங்களே விலையை நிர்ணயித்து மூடையின் மீது விலை, நிறுவனத்தின் பெயர், எடை உள்ளிட்ட விபரங்களை எழுத வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலாக விற்க கூடாது என்பதற்காக அதற்கான விலையே அரசு தற்போது வெளியிட்டுள்ளது. விலை பட்டியல்:
50 கிலோ ( 1 மூடை) : யூரியா; ரூ. 268.14, டி.ஏ.பி.,; 910, 20:20:0:13; ரூ.740, டி.ஏ.பி., லைட் ; 880, மோனோ அமோனியம் பாஸ்பேட்; 910, மி.யு.ரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.,); 565, சூப்பர் பாஸ்பேட்; 262.58 காசு என நிர்ணயித்துள்ளது. விவசாயிகள் அரசு அறிவித்துள்ள விலையில் உரங்களை வாங்கி பயன் அடையலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

**தொடர் மழையால் விவசாயிகள் சிவகங்கையில் கண்மாய்கள் நிரம்புகிறது**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,02:48 IST

சிவகங்கை : பருவ மழை தாமதமாக துவங்கினாலும் கடந்த ஆண்டை விட கூடுதலாக மழை பெய்துள்ளதால் அமோக விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 904 மில்லி மீட்டர் மழை பெய்யும். 2010ல் 827 மில்லி மீட்டர் மழை மட்டுமே பெய்தது. இந்த ஆண்டு அக்டோபர் காரைக்குடியில் 235 மி.மீ.,

மானாமதுரையில் 253, சிவகங்கையில் 375, திருப்புவனம் 267, திருப்புத்தூர் 296, இளையான்குடியில் 238, தேவகோட்டையில் 194 மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் உள்ள 4,813 கண்மாய்களில் 10 சதவீத கண்மாய்களில் 100 சதவீதமும், 40 சதவீத கண்மாய்களில் 50 சதவீதமும் மற்றவை 50 சதவீதத்திற்கும் கீழ் நிரம்பியுள்ளது. கண்மாய் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் தற்போது பெய்து வரும் தொடர் மழையால் வசாய பணிகளை ஆர்வத்துடன் துவக்கியுள்ளனர்.வேளாண்மை துறை இணை இயக்குனர் தெட்சிணாமூர்த்தி கூறியதாவது: மாவட்டத்தில் 70 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 20 ஆயிரம் எக்டேரில் நடவு பணிகள் துவுங்கியுள்ளன. நவம்பர் வரை 800 மி.மீ.,மழை பெய்தால் முழு மகசூல் கிடைக்கும். இதன் தொடர்ச்சியாக டிசம்பரில் 100 மி.மீ., மழை பெய்தால் போதுமானது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்ய வாய்ப்புள்ளது என்பதால் விவசாயிகள் பணிகளை ஆர்வத்துடன் செய்து வருகின்றனர். என்றார். தேவகோட்டையில் தொடரும் மழையால் பல இடங்களில் தண்ணீர் செல்ல வழியின்றி குளம்போல் தேங்கி நிற்கிறது.9 வது தொகுதி நகராட்சி பள்ளிக்கு செல்ல வேண்டிய மாணவர்கள் ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. நகர் முழுவதும் இதே நிலை இருந்ததால் நகராட்சி தலைவர் சுமித்ரா, கமிஷனர் இசக்கியப்பன்,பொறியாளர் செல்வநாதன் மற்றும் சுகாதார அலுவலர்கள் பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் லைசென்ஸ் ரத்து செய்யப்படும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,02:47 IST

சிவகங்கை : ""உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் லைசென்ஸ் ரத்து செய்யப்படும்," என, விவசாயத்துறை இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.அவர் கூறியதாவது:மாவட்டத்தில் தொடர் மழையால், நெல் நடவு பணி நடக்கிறது. 60 ஆயிரம் எக்டேரில் நடவு செய்த பயிருக்கு உரமிட ஏற்ற தருணமாக உள்ளது. உரங்களின் தேவை அதிகரித்துள்ளதை பயன்படுத்தி உர விற்பனையாளர்கள் கூடுதல் விலைக்கு விற்பதாக தெரிகிறது. அரசு நிர்ணயம் செய்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்பது தெரிய வந்தால்,உர விற்பனைக்கான லைசென்ஸ் ரத்துசெய்யப்படும்.இதை கண்காணிக்க, வட்டார அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளது.விவசாயிகள் உரங்களை வாங்கும் போது மூடைகளில் உள்ள விலை விபரங்களை அறிந்து வாங்க வேண்டும்.கூடுதல் விலைக்கு உரம் விற்பவர்கள் குறித்து, விவசாய இணை இயக்குனர் - 94436 31437, விவசாய உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) - 94430 13945 என்ற எண்ணிற்கு தகவல் தரலாம் என்றார்

மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில் இயந்திர கருவியால் களை எடுப்பு

பதிவு செய்த நாள் : நவம்பர் 06,2011,02:44 IST

காரைக்குடி : சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு, மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் சாகுபடி செய்துள்ள துவரையில் இயந்திர கருவி கொண்டு களை எடுக்கும் ஆய்வு பணி நடந்து வருகிறது. இந்தியாவில் பருப்பு வகை பயிர்களின் உற்பத்தி குறைவாக இருப்பதால் நாளுக்கு நாள் இதன் விலை அதிகரிக்கிறது. தவிர, வேலையாட்கள் விவசாய வேலைகளுக்கு உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. இதுபோன்ற பல்வேறு காரணங்களால், பயிறு வகை பயிர்களில் முக்கியமான துவரை சாகுபடியில் இயந்திரங்களை கொண்டு விதைப்பு செய்தல், களை எடுக்கும் கருவி கொண்டு களை எடுத்தல் போன்றவை பற்றி ஆய்வுப்பணி, மானாவாரி செம்மண் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்து வருகிறது. துவரை பயிரில் நீண்ட கால ரகமான "வம்பன் 2' விதைப்பு கருவி கொண்டு 1 மீட்டர் இடைவெளியில் விதைப்பு செய்யப்படுகிறது. களை எடுக்கும் கருவிகளை கொண்டு களை எடுப்பதற்காக இந்த இடைவெளி தேவைப்படுகிறது. ஒரு ஏக்கர் விதைக்க 75 நிமிடங்களாகிறது. ஒரே சீரான ஆழத்தில் விதைப்பதால் பயிர்கள் நன்றாக வளர்கிறது. கைகள் மூலம் களை எடுத்தால் ஏக்கருக்கு 20 முதல் 25 ஆட்கள் வரை தேவைப்படுவர். இதற்கு 2000 முதல் 2500 ரூபாய் வரை கூலி கொடுக்க வேண்டும். இயந்திர கருவி மூலம் இப்பணியை செய்வதால் 800 முதல் 1000 ரூபாய் வரை மட்டுமே செலவாகும்.

ஆராய்ச்சி நிலைய தலைவர் பி. பாலகிருஷ்ணன் கூறியதாவது:ஆட்கள் பற்றாக்குறை காலங்களில் உரிய நேரத்தில் இயந்திர கருவிகளை கொண்டு களையெடுக்க முடியும். துவரையில் பூ உதிர்வது முக்கியமான மகசூல் இழப்பை ஏற்படுத்த காரணியாகும். இதனை தவிர்ப்பதற்கு வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை திட்டத்தின் கீழ் (ஆத்மா) இலை வழியாக பயிர் ஊக்கிகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறைகளும் செயல்படுத்தப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. விதைப்பு கருவி கொண்டு "கோ-6' ரக உளுந்து மானாவாரியில் விதைக்கப்பட்டு ஆய்வு நடந்து வருகிறது, என்றார்.

## உணவு பணவீக்கம் உயர்வு கவலை அளிக்கும் அம்சம் பிரணாப் முகர்ஜி கூறுகிறார்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை

உணவுப் பணவீக்கம் உயர்வு கவலையளிக்கும் அம்சமாக உள்ளது என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அக்டோபர் மாதத்தில் உணவுப் பணவீக்கம், முந்தைய ஒன்பது மாதங்களில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. அக்டோபர் 22–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது 12.21 சதவீதமாக இருந்தது. ஜனவரி 29–ந் தேதியுடன் முடிந்த வாரத்திற்குப் பின்னர் இப்பணவீக்கம் இந்த அளவிற்கு அதிகரித்துள்ளது இதுவே முதல் முறையாகும்.

இறைச்சி, முட்டை, மீன் போன்ற அசைவ உணவுப் பொருள்கள், காய்கறி, பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பால் உணவுப் பணவீக்கம் உயர்ந்துள்ளது என்பதை பிரணாப் முகர்ஜி சுட்டிக் காட்டியுள்ளார்.

வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்திய மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் பெரிய மாறுதல்களை சந்தித்து வருகின்றன. இதனால் நகர்ப்புறங்களில் நடுத்தர வர்க்கத்தினர் மதிப்புக் கூட்டப்பட்ட மற்றும் அதிக புரதம் கொண்ட உணவுப் பொருள்களை அதிகம் நுகர தொடங்கியுள்ளனர். இதன் காரணமாக பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுக்கான தேவை பன்மடங்கு உயர்ந்து விலையும் அதிகரித்து வருகிறது.